BTA
BERGEN TAMILSK AVIS
51
Sep. 2026

# தேன்தமிழிதழ்





# ஆசிரியம்!



**வணக்கம் உறவுகளே!**

தேன் தமிழிதழ் 50 இதழ்களைக் கடந்து தொடரும் இனிய பயணம்.

உறவுகளே,
நோர்வே நாட்டிலிருந்து உலகம் முழுவதும் மின் வழியாகவும், அச்சுப் பிரதியாகவும் பயணித்து, எமது அன்பான தமிழ் உறவுகளின் உள்ளங்களைத் தொட்டு வரும் தேன் தமிழிதழ், இன்று 50 இதழ்களைக் கடந்து தனது 51வது அறுவடையின் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

50ஆவது இதழை முன்னிட்டு எமக்கு கிடைத்த பாராட்டுகளும், விமர்சனங்களும், கருத்துப் பகிர்வுகளும் எம்மை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளன.

ஒரு இதழின் வளர்ச்சிக்கு வாசகர்களின் அன்பும் ஆதரவும் எவ்வளவு முக்கியமானது என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்திய தருணமாக இது அமைந்தது. எம்மீது அன்பு கொண்டு, இதழை வாசித்து, தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட அத்தனை அன்பான உறவுகளுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேன் தமிழிதழ் எமது சமூகத்தின் குரலாகவும், வாழ்வின் பதிவாகவும் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதேவேளை, கடந்த ஓகஸ்ட் 28ஆம் நாள், நோர்வே நாட்டின் மன்னர் ஐந்தாம் ஹறால்ட் (King Harald V) அவர்கள் தனது 89ஆவது வயதில் காலமான செய்தி நோர்வே மக்களையும் உலகெங்கும் உள்ள பலரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது.

1991ஆம் ஆண்டு அரியணை ஏற்ற அவர், மூன்றரை தசாப்தங்களுக்கும் மேலாக நோர்வே நாட்டின் மன்னராகப் பணியாற்றினார்.

நாட்டின் பல்லின மக்களையும் ஒன்றிணைக்கும் சிறப்பான

தன்மையுடனும், அமைதியான அன்பான தந்தையாகவும் பணியாற்றியவர்.

குறிப்பாக, மக்களுடன் நெருக்கமாகவும் அன்புடனும் உறவாடிய அவரது அணுகுமுறை, நோர்வே மக்களின் மனங்களில் அவருக்கென ஒரு தனித்த இடத்தை உருவாக்கியது.

இந்த இதழில், மன்னர் Harald V அவர்களின் வாழ்க்கை, பணிகள் மற்றும் நோர்வே சமூகத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கம் குறித்த பதிவுகளையும் உங்களுடன் தொடரும் பக்கங்களில் பகிர்ந்துகொள்கிறோம்.

மன்னன் ஐந்தாம் Harald அவர்கள் உயிர்நீர்த்த உடன் புதிய மன்னனாக அவரது புதல்வன் Haakon அவர்கள் மன்னனாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
புதிய மன்னருக்கு தேன் தமிழிதளின் வாழ்த்துக்களை மனதாரத் தெரிவித்து நிற்கிறோம்.



Kong Harald V



Kong Haakon VIII

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: **Julius Antoni**
ஆசிரியர்: **யூலியஸ் அன்ரனி**
தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA
BERGEN TAMILSK AVIS

Vipps 729129, eller
bank konto: 3626 31 78585

# அனைவரையும் அரவணைத்த மன்னர் ஹரால்ட்

## நோர்வேயின் வரலாறு, துயரம், பன்மைத்துவம் ஆகியவற்றை இணைத்த ஓர் ஆளுமை!





குபேரன் துரைராஜா

ஒரு நாட்டைத் தாயகமாக உணர்வதற்கு அந்நாட்டின் குடியுரிமை மட்டும் போதுமா? நாம் யார் என்பதையும், நமது மொழி, பண்பாடு, கடந்தகாலம் ஆகியவற்றையும் அந்தச் சமூகம் ஏற்றுக்கொள்கிறது என்ற உணர்வும் அவசியமல்லவா?

நோர்வே மன்னர் ஐந்தாம் ஹரால்ட், தனது உரைகளிலும் மக்களுடனான சந்திப்புகளிலும் இந்த உணர்வுக்கு இடமளித்தார். வெவ்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களும் நோர்வேயின் சமூகத்தில் இயல்பாக இணைந்தவர்கள் என்பதை அவர் தொடர்ந்து வெளிப்படுத்தினார்.

2026 ஒகஸ்ட் 28 அன்று மன்னர் ஹரால்ட் மறைந்தபோது, 1991 முதல் நாட்டின் தலைவராக விளங்கிய ஓர் ஆளுமைக்கு நோர்வே விடைகொடுத்தது. தனது 35 ஆண்டுகால ஆட்சிப் பொறுப்பில், நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்த இவர், அன்பான அணுகுமுறை, நகைச்சுவை உணர்வு, கடமைப்பற்று ஆகியவற்றால் மக்களின் மனங்களில் இடம்பிடித்தார்.

நோர்வேக்கு வெளியே பிறந்து, பின்னர் இந்நாட்டைத் தங்கள் வாழ்விடமாக ஏற்றுக்கொண்டவர்களுக்கும் அவர் ஏன் முக்கியமானவராகத் திகழ்ந்தார்? அதற்கான ஒரு பதில், நோர்வேயையும் அதன் மக்களையும் அவர் வரையறுத்த விதத்தில் இருக்கிறது. அவரது பார்வையில், நோர்வேயைச் சேர்ந்தவராக இருப்பதற்கு ஒரே மாதிரியான தோற்றமோ, மதமோ, குடும்பப் பின்னணியோ தேவையாக இருக்கவில்லை.

### பழமையான முடியாட்சியும் நவீன நோர்வேயும்

**நோர்**வேயின் முடியாட்சி வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது. சிறு அரசுகளாக இருந்த பகுதிகளை ஒன்றிணைத்த முதல் மன்னராக ஹரால்ட் ஹோர்ஃபாக்ரே மரபுவழியாகக் கருதப்படுகிறார். பின்னர் நோர்வே, டென்மார்க் மற்றும் சுவீடனுடனான அரசியல் ஒன்றியங்களில் நீண்டகாலம் இணைந்திருந்தது.



1905ஆம் ஆண்டு சுவீடனுடனான ஒன்றியம் முடிவுக்கு வந்தபோது, சுதந்திர நோர்வேயின் நவீன அரச குடும்பம் உருவானது. நோர்வேயின் மன்னராக வருமாறு டென்மார்க் இளவரசர் கார்லுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், மக்களின் ஆதரவு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். இதற்காக நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பைத் தொடர்ந்து, நோர்வே நாடாளுமன்றம் இவரை மன்னராகத் தேர்ந்தெடுத்தது. இவர் ஏழாம் ஹோக்கோன் என்ற பெயரை ஏற்றார். பிரித்தானியாவைச் சேர்ந்த அவரது மனைவி மோட் அரசியானார். இவர்களது மகன் அலெக்சாண்டருக்கு ஓலாவ் என்று பெயர் சூட்டப்பட்டது.

பின்னாளில் நோர்வேயின் அடையாளமாக விளங்கிய இந்த அரச குடும்பத்திற்கே பிற நாடுகளில் வேர்கள் இருந்தன. தேசிய அடையாளம் என்பது பிறப்பிடத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை நினைவூட்டும் வரலாறு இது.

### போர்க்காலத்தில் நம்பிக்கையின் அடையாளமான அரச குடும்பம்

இரண்டாம் உலகப் போரின்போது, மன்னர் ஏழாம் ஹோக்கோன் நோர்வே மக்களுக்கு ஒரு முக்கியமான நம்பிக்கைச் சின்னமாகத் திகழ்ந்தார்.

1940 ஏப்ரலில் நாசி ஜெர்மனி நோர்வே மீது படையெடுத்தது. ஜெர்மனியுடன் ஒத்துழைத்த விட்குன் குவிஸ்லிங்கைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மன்னர் ஏற்க மறுத்தார். மன்னரும் அரசாங்கமும் எதிர்ப்பைத் தொடர்ந்தனர். பின்னர் லண்டனில் தஞ்சமடைந்து, அங்கிருந்து சுதந்திர நோர்வேக்கான பணிகளை முன்னெடுத்தனர்.

இதனால், மன்னர் ஹோக்கோன் நாட்டின் சுதந்திரத்தையும் ஜனநாயக அமைப்புகளையும் காப்பதற்கான உறுதியின் அடையாளமானார். அரச குடும்பத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உறவில் இந்தப் போர்க்கால அனுபவம் ஆழமான இடத்தைப் பெற்றது.

அப்போது ஹரால்டுக்கு மூன்று வயது மட்டுமே. தனது தாயார் பட்டத்து இளவரசி மார்த்தா, சகோதரிகள் ராக்ன்ஹில்ட் மற்றும் அஸ்திரித் ஆகியோருடன் முதலில் சுவீடனுக்கும், பின்னர் அமெரிக்காவுக்கும் அவர் தப்பிச் சென்றார். அவரது தந்தை பட்டத்து இளவரசர் ஓலாவ், மன்னர் ஹோக்கோனுடன் பிரித்தானியாவில் இருந்தார்.

1945ஆம் ஆண்டில்தான் குடும்பத்தினர் மீண்டும் நோர்வேயில் ஒன்றுசேர முடிந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்த குழந்தையாக ஹரால்டுக்குக் கிடைத்த பாதுகாப்பு, பல சாதாரண அகதிகளின் நிலைமையிலிருந்து வேறுபட்டது. இருந்தபோதிலும், போரினால் தாயகத்தை விட்டு வெளியேறுவதையும் குடும்பத்தைப் பிரிந்து வாழ்வதையும் அவர் சிறுவயதிலேயே அனுபவித்திருந்தார். பிற்காலத்தில் தாயகம், பாதுகாப்பு, சேர்ந்திருக்கும் உணர்வு ஆகியவை குறித்து இவர் பேசியதைப் புரிந்து கொள்வதற்கு இந்த அனுபவம் ஒரு முக்கியமான பின்னணியாக அமைகிறது.

## மக்களின் மன்னரிடமிருந்து ஹரால்டுக்கு

**1957**ஆம் ஆண்டு ஐந்தாம் ஓலாவ் மன்னரானார். எளிமையான, மக்களுடன் நெருக்கமான அவரது அணுகுமுறை காரணமாக அவர் “மக்களின் மன்னர்” என்று அழைக்கப்பட்டார். 1991 ஜனவரியில் அவர் மறைந்தபோது, மக்களுடனான அந்த நெருக்கத்தைத் தொடர்ந்து பேணும் பொறுப்பு ஹரால்டிடம் வந்தது.

ஹரால்டின் தனிப்பட்ட வாழ்க்கையும் அரச மரபுகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலித்தது. அரச வம்சத்தைச் சேராத சோனியா ஹரால்ட்செனைத் திருமணம் செய்வதற்காக இருவரும் ஒன்பது ஆண்டுகள் காத்திருந்தனர். 1968ஆம் ஆண்டு அவர்களது திருமணம் நடைபெற்றது. கடுமையான மரபுகளைக் கொண்டிருந்த அரச குடும்பத்தில் இது ஒரு முக்கியமான மாற்றமாக அமைந்தது.

இவர்களுக்கு மார்த்தா லூயிசே, ஹோக்கோன் ஆகிய இரு பிள்ளைகள் பிறந்தனர். மன்னராகவும் அரசியாகவும் ஹரால்டும் சோனியாவும் நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் செய்து மக்களைச் சந்தித்தனர். இத்தகைய சந்திப்புகள், அரச குடும்பத்தை மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு நெருக்கமாகக் கொண்டுவந்தன.

## துயரமான தருணங்களில் ஆறுதலாக ஒலித்த குரல்

**2011** ஜூலை 22, நோர்வேயின் அண்மைக்கால வரலாற்றில் ஆழமான துயரத்தை ஏற்படுத்திய நாளாகும். அன்று நோர்வேயைச் சேர்ந்த தீவிர வலதுசாரிப் பயங்கரவாதியான ஆண்டர்ஸ் பேரிங் பிரெய்விக் இரண்டு தாக்குதல்களை நடத்தினார்.

முதலில், தலைநகர் ஒஸ்லோவில் அரசாங்க அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் அவர் நடத்திய குண்டுவெடிப்பில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். பின்னர்,
நோர்வே தொழிலாளர் கட்சியின் இளைஞர் அமைப்பான AUF நடத்திய கோடைக்கால முகாம் நடைபெற்ற ஊட்டொயா தீவுக்குச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தினார். அங்கு 69 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினர். இரு தாக்குதல்களிலும் மொத்தம் 77 உயிர்கள் பறிக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல்கள் அரசாங்கத்தையும், அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்களையும் குறிவைத்தன. மனித உயிர்களைப் பறித்ததுடன், ஜனநாயகப் பங்கேற்பிற்கான பாதுகாப்பு உணர்வையும் இவை ஆழமாகப் பாதித்தன.

உயிர் பிழைத்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் எனப் பலரது வாழ்க்கையில் நீங்காத காயங்களை ஏற்படுத்தின.
நாடு அதிர்ச்சியிலும் துயரத்திலும் மூழ்கியிருந்த அந்த நேரத்தில், மன்னர் ஹரால்ட் மக்களிடம் உரையாற்றினார். பாதிக்கப்பட்டவர்களுக்கும் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்து, ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஒருமாதத்திற்குப்பின்னர் நடைபெற்ற தேசிய நினைவேந்தலில், அன்றாட வாழ்க்கை மீண்டும் வழமைக்குத் திரும்பிய பின்னரும் துயரத்தில் இருப்பவர்களுக்கு ஆதரவு தேவைப்படும் என்பதை நினைவூட்டினார். துயரத்தின் நீண்ட பயணத்தில் பாதிக்கப்பட்டவர்களைத் தனிமையில் விட்டுவிடக்கூடாது என்ற அக்கறை அவரது உரையில் வெளிப்பட்டது.

2020 மார்ச்சில் கொரோனா பெருந்தொற்று மக்களின் இயல்பு வாழ்க்கையை மாற்றியபோதும், அவர் மக்களிடம் பேசினார். எதிர்காலம் குறித்த நிச்சயமின்மை, அச்சம், இயலாமை ஆகிய உணர்வுகளைத் தனது உரையில் வெளிப்படுத்தினார். உடலளவில் விலகியிருக்க வேண்டிய காலத்திலும், ஒருவர்மீது ஒருவர் அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

Gjerdrum பகுதியில் ஏற்பட்ட பேரழிவான நிலச்சரிவைத் தொடர்ந்து, 2021 ஜனவரியில் அரசி சோனியா மற்றும் அப்போதைய பட்டத்து இளவரசர் ஹோக்கோனுடன் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தார். அப்போது தனது உணர்வுகளை வெளிப்படுத்த வார்த்தைகள் கிடைக்கவில்லை என்று கூறினார்.

சில தருணங்களில் ஆறுதல் என்பது நீண்ட உரையாக இருப்பதில்லை. நேரில் சென்று, அருகில் நின்று, மற்றவர்களின் துயரத்தைப் பகிர்ந்துகொள்வதாகவும் இருக்கிறது. மன்னரின் இந்த அணுகுமுறை அவரது பணிக்கு மனிதநேயமான பரிமாணத்தை அளித்தது.

### மறைக்கப்பட்ட வரலாற்றுக்கும் அங்கீகாரம்

மன்னர் ஹறால்டின் அரவணைப்பு, பொதுவாக அறியப்பட்ட தேசிய நிகழ்வுகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட மனிதர்களின் அனுபவங்களுக்கும் அவர் இடமளித்தார்.

ஃபின்மார்க் பகுதியின் பார்ட்டிசான் எதிர்ப்புப் போராளிகளுக்கு இவர் அளித்த அங்கீகாரமும், சாமி மக்களுக்கு எதிரான நோர்வேமயமாக்கல் கொள்கைக்காக அவர் தெரிவித்த வருத்தமும் இதற்கான முக்கியமான எடுத்துக்காட்டுகளாகும்.

### பார்ட்டிசான்கள் யார்?

இரண்டாம் உலகப்போரின்போது, வடநோர்வேயின் ஃபின்மார்க் பகுதியில் ஜெர்மனிய ஆக்கிரமிப்புக்கு எதிராகச் செயல்பட்ட எதிர்ப்புப் போராளிகள் பார்ட்டிசான்கள் என அழைக்கப்பட்டனர்.
இவர்களில் பலர் கிழக்கு ஃபின்மார்க்கிலுள்ள கிபெர்க் என்ற சிறிய மீன்பிடிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் சோவியத் ஒன்றியத்துடன் இணைந்து செயல்பட்டனர். அக்காலத்தில் சோவியத் ஒன்றியமும் பிரித்தானியா, அமெரிக்கா உள்ளிட்ட நேச நாடுகளும் நாசி ஜெர்மனிக்கு எதிராகப் போரிட்டன.

சோவியத் ஒன்றியத்தில் பயிற்சி பெற்ற பார்ட்டிசான்கள் வட நோர்வேக்குத் திரும்பி, மறைவிடங்களிலிருந்து ஜெர்மனியப் படைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்தனர். கப்பல் போக்குவரத்து, படை நகர்வுகள் போன்றவற்றை வானொலி மூலம் அனுப்பினர். மிகுந்த ஆபத்துகள் நிறைந்த இந்தப் பணியில் ஈடுபட்ட பலர் கண்டுபிடிக்கப்பட்டு உயிரிழந்தனர்.
ஆனால் போருக்குப் பின்னர் நிலைமை மாறியது. மேற்கத்திய நாடுகளுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே பனிப்போர் உருவானது. சோவியத் தொடர்புகள் காரணமாக, பார்ட்டிசான்கள் நோர்வே அதிகாரிகளின் சந்தேகத்திற்கும் கண்காணிப்பிற்கும் உள்ளானார்கள். நாட்டின் விடுதலைக்காக அவர்கள் செய்த பங்களிப்பு நீண்டகாலம் உரிய அங்கீகாரத்தைப் பெறவில்லை.

1992 ஓகஸ்ட் 3 அன்று கிபெர்க் பார்ட்டிசான் நினைவுச் சின்னத்திற்குச் சென்ற மன்னர் ஹறால்ட், மௌனத்தால் மறைக்கப்பட்டிருந்த இந்த வரலாற்றைப் பற்றிப் பேசினார். ஃபின்மார்க்கின் போர்க்கால வரலாறு பாடசாலைகளிலும் அதிகமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதுவரை தேசிய வரலாற்றில் உரிய இடம் பெறாதவர்களின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ளும் முக்கியமான தருணமாக அந்த உரை அமைந்தது.

### சாமி மக்களும் நோர்வேமயமாக்கல் கொள்கையும்



சாமி மக்கள் வட ஐரோப்பாவின் பூர்வகுடி மக்களாவர். அவர்களது பாரம்பரிய வாழ்விடங்கள் இன்றைய நோர்வே, சுவீடன், பின்லாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் பகுதிகளில் அமைந்துள்ளன. அவர்களுக்கென மொழிகள், பண்பாட்டு மரபுகள் மற்றும் இன்றைய நாட்டின் எல்லைகளைக் கடந்த வரலாறு உள்ளன.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதிவரை, நோர்வே அதிகாரிகள் சாமி மக்களை மொழியிலும் பண்பாட்டிலும் நோர்வே சமூகத்துடன் ஒன்றாக்கும் கொள்கையை முன்னெடுத்தனர். இது "நோர்வேமயமாக்கல்" எனப்படுகிறது. க்வேன் மக்களும் நோர்வேயில் வாழ்ந்த பின்னிஷ் பின்னணியினரும் இக்கொள்கையால் பாதிக்கப்பட்டனர்.

பாடசாலைகள் இதற்கான முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. நோர்வே மொழி புரியாத சாமிக் குழந்தைகளும் அந்த மொழியிலேயே கல்வி கற்க வேண்டியிருந்தது. பல குழந்தைகள் குடும்பத்திலிருந்து பிரிந்து விடுதிப் பாடசாலைகளில் தங்கினர். பாடசாலையில் தாய்மொழியைப்பேச அனுமதி மறுக்கப்பட்ட அனுபவங்களும் இருந்தன.

இதனால் பலருக்குத் தங்கள் மொழியுடனும் பண்பாட்டுடனும் இருந்த தொடர்பு பலவீனமடைந்தது. மொழி, அடையாளம், வாழ்க்கை நிலை ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்புகள் அடுத்த தலைமுறைகளுக்கும் தொடர்ந்தன. அந்த வரலாற்றின் காயங்கள் இன்றும் முழுமையாக ஆறிவிடவில்லை.

1997 ஒக்டோபர் 7 அன்று சாமி மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அமைப்பான சாமி நாடாளுமன்றத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய மன்னர் ஹறால்ட், நோர்வேமயமாக்கல் கொள்கையின் மூலம் அரசு சாமி மக்களுக்கு இழைத்த அநீதிக்காக வருத்தம் தெரிவித்தார். வலுவான, நிலைத்த சாமி சமூகத்தை வளர்ப்பதற்கான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பு என்றும் வலியுறுத்தினார்.

தமிழ் வாசகர்களுக்கு இந்த வரலாறு நெருக்கமான ஒரு சிந்தனையை ஏற்படுத்தலாம். தாய்மொழியையும் பண்பாட்டையும் வரலாற்றையும் பாதுகாப்பது ஒரு சமூகத்தின் கண்ணியத்துடன் தொடர்புடையது. சாமி மக்களினதும் தமிழர்களினதும் வரலாற்று அனுபவங்கள் வேறுபட்டவை. எனினும், மொழிக்கும் அடையாளத்திற்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு இரு சமூகங்களுக்கும் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும்.

### 'நோர்வே என்பது நீங்கள் நோர்வே என்பது நாம்'

**2016** செப்டம்பர் 1 அன்று அரண்மனைப் பூங்காவில் நடைபெற்ற தோட்ட விருந்தில் மன்னர் ஹரால்ட் ஆற்றிய உரை, பன்மைத்துவம் குறித்த அவரது பார்வையைத் தெளிவாக வெளிப்படுத்தியது.
பல்வேறு நாடுகளில் வேர்களைக் கொண்டவர்கள், வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள், வெவ்வேறு பாலியல் ஈர்ப்புகளைக் கொண்டவர்கள், உடல் திறன்களில் வேறுபட்டவர்கள் என அனைவரையும் நோர்வே மக்களாக அவர் விவரித்தார். தனது தாத்தாவும் பாட்டியும் பிற நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் என்பதையும் நினைவூட்டினார்.

அந்த உரையின் மையச் செய்தி எளிமையானது:
"நோர்வே என்பது நீங்கள். நோர்வே என்பது நாம்"
நாட்டை உருவாக்குவது அதில் வாழும் மனிதர்களே. அவர்களின் வேறுபாடுகளும் அந்த நாட்டின் ஒரு பகுதியே என்பதுதான் அதன் பொருள்.

"நீங்கள் உண்மையில் எங்கிருந்து வந்தவர்?" என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் எதிர்கொள்பவர்களுக்கு, இத்தகைய வார்த்தைகள் ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கலாம். ஒரு நாட்டைச் சேர்ந்தவராக இருப்பதற்கு, ஒருவர் தனது முந்தைய வாழ்க்கையையும் வேர்களையும் அழித்துவிட வேண்டியதில்லை என்ற அங்கீகாரமாக அவற்றைப் புரிந்துகொள்ளலாம்.

### நோர்வேத் தமிழர்களுக்கு இந்தச் செய்தியின் பொருள்

நோர்வே மீது அன்பு கொண்டிருப்பதும், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பதும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. குடும்பத்தின் பூர்வீக நாட்டுடனான தொடர்புகளைப் பேணிக்கொண்டே, நோர்வே சமூகத்தின் முழுமையான அங்கமாக வாழ முடியும்.

ஒருவர் நோர்வேயில் கிடைத்த பாதுகாப்பையும் வாழ்வையும் நன்றியுடன் நினைக்கலாம். அதேவேளை, வேறொரு நாட்டில் நிகழ்ந்த போரையும் இழப்புகளையும் மனதில் சுமந்திருக்கலாம். குழந்தைகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளுடனும் பண்பாடுகளுடனும் வளர்ந்தாலும், நோர்வே சமூகத்தில் அவர்களுக்கு இயல்பான, சமமான இடம் இருக்க முடியும்.

இது மன்னரின் "அனைவரையும் உள்ளடக்கும் செய்தி"யிலிருந்து நாம் பெறக்கூடிய ஒரு புரிதலாகும். அனைத்து தமிழர்களும் குடியேறிய மக்களும் அவரை ஒரே விதமாக உணர்ந்தார்கள் என்று கூற முடியாது. இருப்பினும், ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாட்டு வேர்களைக் கொண்டவர்களின் சேர்ந்திருக்கும் உணர்வை வெளிப்படுத்த இவரது வார்த்தைகள் இடமளித்தன.




### தொடர்ந்து வாழ வேண்டிய மரபு

பாகுபாட்டையும் சமூகப் புறக்கணிப்பையும் மன்னர் ஹரால்ட் ஒருவரால் மட்டும் அகற்றிவிட முடியாது. ஆனால், நாம் ஒருவரைப் பற்றி ஒருவர் எவ்வாறு பேசுகிறோம், யாரை நமது சமூகத்தின் அங்கமாக ஏற்றுக்கொள்கிறோம் என்பதில் இவரது குரல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

துயரத்தில் இருப்பவர்களை அணுகுவது, மறைக்கப்பட்ட வரலாற்றை அங்கீகரிப்பது, தாம் இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களா என்று தயங்குபவர்களுக்கு இடமளிப்பது ஆகியவற்றில் அவரது முக்கியத்துவம் வெளிப்பட்டது.

இவர் விட்டுச்சென்ற மரபு, அரண்மனையுடன் மட்டும் தொடர்புடையதல்ல. பாடசாலையில், பணியிடத்தில், அயலவருடனான உறவில், புதிதாக நாட்டிற்கு வந்த ஒருவரைச் சந்திக்கும் தருணத்தில்-அந்த மரபை நாம் தொடர முடியும்.

அனைவரையும் அரவணைக்கும் நோர்வே என்பது அன்றாட வாழ்வில் உருவாக்கப்பட வேண்டிய ஒன்று. அதற்கான அழைப்பாகவே மன்னர் ஹரால்டின் வார்த்தைகள் தொடர்ந்து ஒலிக்கின்றன:
**நோர்வே என்பது நீங்கள். நோர்வே என்பது நாம்.**



# நோர்வே போக்குவரத்து அமைச்சராக இலங்கை தமிழ் மகளான கம்ஸி



**நோ**ர்வே போக்குவரத்து அமைச்சராக இலங்கை தமிழ் மகளான கம்ஸி குணரெட்ணம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கம்ஸி குணரெட்ணம் (Kamzy Gunaratnam) நோர்வே தொழிலாளர் கட்சியைச் (Arbeiderpartiet) சேர்ந்தவர். 27.03.1988 அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர், மூன்று வயதில் தனது குடும்பத்துடன் நோர்வே வந்து Hammerfest நகரிலும் பின்னர் Osloவிலும் வாழ்ந்து வருகிறார்.

இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபட்ட கம்சாயினி Oslo நகரசபை உறுப்பினராகவும், 2015/2021 காலப்பகுதியில் Oslo துணை மேயராகவும் பணியாற்றினார். 2021ஆம் ஆண்டு Oslo தொகுதியிலிருந்து நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2025ம் ஆண்டிலும் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

2026 செப்டம்பர் 11ம் நாள், நோர்வே பிரதமர் Jonas Gahr Støre தலைமையிலான அரசில் கம்ஸி குணரெட்ணம் நோர்வே போக்குவரத்து அமைச்சராக (Samferdselsminister) நியமிக்கப்பட்டுள்ளார். போக்குவரத்து தொடர்பான கொள்கைகள் மற்றும் அஞ்சல் சேவைகள் உள்ளிட்ட துறைகள் அவரது அமைச்சுப் பொறுப்பில் அடங்குகின்றன.

இலங்கையில் பிறந்து நோர்வேயில் வளர்ந்து, நகரசபை அரசியலிலிருந்து நாடாளுமன்றம் மற்றும் அமைச்சுப் பொறுப்பு வரை சென்றுள்ள அவரது அரசியல் பயணம், நோர்வேயின் பன்முக சமூகத்தின் வெற்றி என்றே கூறவேண்டும்.

அமைச்சர் கம்ஸி குணரெட்ணம் அவர்களுக்கு தேன் தமிழிதழின் இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கிறோம்.

# சமூக ஊடகங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் எதிர்கொள்ளும் சவால்கள் அதிகரிக்கின்றன




நோர்வேயில் சமூக ஊடகங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் வெவ்வேறு வகையான தரவுகளை அதிகமாக எதிர்கொள்வதாக நோர்வே ஊடக ஆணையத்தின் (Medietilsynet) புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

13 முதல் 16 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் TikTok மற்றும் YouTube பயன்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், 52,000-க்கும் மேற்பட்ட TikTok காணொளிகளும், சுமார் 92,500 YouTube காணொளிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

சிறுமிகள் வாழ்க்கை முறை, fashion, அழகு மற்றும் உளநலம் தொடர்பான உள்ளடக்கங்களை அதிகம் பார்க்கின்றனர். அதேவேளை, சிறுவர்கள் கேமிங், விளையாட்டு மற்றும் செய்திகள் தொடர்பான உள்ளடக்கங்களை அதிகமாக எதிர்கொள்கின்றனர். குறிப்பாக YouTube-ல் குற்றவியல், போதைப்பொருள் தொடர்பான உள்ளடக்கங்களுக்கு சிறுவர்கள் அதிகமாக அடிமைகள் ஆகுவதாக ஆய்வு கூறுகிறது.

TikTok காணொளிகளில் சுமார் 2 சதவீதமும் YouTube காணொளிகளில் 3 சதவீதமும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை பயன்படுத்தி வருகின்றனர். இரு தளங்களிலும் வன்முறை தொடர்பான உள்ளடக்கமே மிகப்பெரிய பிரிவாக உள்ளன. சிறுமிகள் உடல் தோற்றம் குறித்த அழுத்தம் மற்றும் உணவுக் கோளாறுகள் தொடர்பான உள்ளடக்கங்களையும், பகிடி வதைகளையும் அதிகம் எதிர்கொள்கின்றனர்.

TikTok-ஐ இளைஞர்கள் தீவிரமாகப் பயன்படுத்துவதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. ஒரு நாளில் சராசரியாக 628 காணொளிகளைப் பார்ப்பதுடன், ஐந்தில் ஒருவர் தினமும் மூன்று மணி நேரத்திற்கும் அதிகமாக TikTok பயன்படுத்துகின்றனர். YouTube-ல் சராசரியாக 57 காணொளிகள் பார்க்கப்படுகின்றன.

இளைஞர்கள் செய்திகளைப் பெறுவதற்கும் TikTok முக்கிய தளமாக மாறியுள்ளதாக நோர்வே ஊடக ஆணையம் தெரிவித்துள்ளது.



# கண்ணீரை கொஞ்சம் நிறுத்திவை

-நேதா மோகன்-

நீ வருவதாக நிச்சயித்திருந்த
காலத்தில்தான்
சோளகத்து காற்று வெறிபிடித்து
வீசிக்கொண்டிருந்தது

நான் தீவின் கடலுடன் நின்று
ஒவ்வொரு பகலையும்
அலைகளுடனே கழித்து விட்டு
வீடு திரும்புகிறேன்

என் கரைக்கும் உன் கரைக்கும்
இடையே கோடான கோடி அலைகள்,

என் திட்டுக்கும் உன் திட்டுக்கும்
இடையே பெரும் உப்புநீர்பெருக்கு,

உன் கடலுக்கும் என் கடலுக்கும் இடையில்
அக்கடல் கொதிக்கும் வெய்யில்,

உன் அலைகளும் என் அலைகளும்
ஆழி அள்ளிக் குவித்த கிழிஞ்சல்கள்,

நம் சமுத்திரம் வானுயர்ந்து
பொங்கி எழும் போதெல்லாம்
கொந்தளிக்கும் அலைபுகுந்து
மீன் பிடித்துச் செல்கிறது கடற்குருவி

அன்பே
என் தீவில் சோளகத்து காற்றடங்கி போகும் ஓர்
நாளில்
உனக்கு பிடித்த விளைமீன் தலையும்
கொதிகுழம்புடன் சோறு பிசைந்து
நீ உணவருந்தும் காலம் வெகு தொலைவில் இல்லை

நீண்ட பிரிவுக்குள்
இறகு சுருக்கி அழும் என் பறவையே
கண்ணீரை கொஞ்சம் நிறுத்திவை.
உப்பு கசியும் என் தீவுக்காற்றிலும்
உன் கண்ணீரின் பிசுபிசுப்பு இருக்கத்தான் செய்கிறது.



# சாலமன் பாப்பையா

## பேசிக் கொண்டுதான் இருப்பார்!

-சிவா முருகுப்பிள்ளை- கனடா



1936இல் பிறந்து 2026இல் எமது மனங்களில் நீங்கா இடம் பெற்று தனது 90 வயதில் இயற்கை எய்தி உள்ளார் சாலமன் பாப்பையா.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினமான செப்டம்பர் 11ம் நாள் தனது சிந்தனையை நிறுத்திக் கொண்டார் வயது மூப்பின் காரணமாக. இவரது வாழ்க்கைத் துணைவியார் ஜெயா பாய் தனது 88ஆவது வயதில் ஜனவரி 2025ஆம் ஆண்டு காலமானார். அவரின் இழப்பு ஐயாவின் மூப்பை மேலும் வருத்தியது எனலாம்.

பிப்ரவரி 22, 1936 அன்று மதுரையில் ஒரு எளிய நெசவுக் குடும்பத்தில் பிறந்தார். சுந்தரம் - பாக்கியம் இணையருக்கு 12 பிள்ளைகளில் இவர் 9வது மகனாகப் பிறந்தார். இவரது தந்தை ஒரு மில் தொழிலாளி மற்றும் எளிய நெசவாளர். வறுமையின் காரணமாகப் பள்ளிப் படிப்பை முடித்ததும் தையல் தொழில் மற்றும் மில் வேலைகளுக்குச் செல்ல வேண்டிய சூழல் ஐயாவிற்கு ஏற்பட்டது.

வறுமையான சூழலிலும் கல்வியில் சிறந்து விளங்கினார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும், தியாகராஜர் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

இவர் பயின்ற மதுரை அமெரிக்கன் கல்லூரியிலேயே தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இலக்கியம் என்பது படித்தவர்களுக்கானது என்பதை மாற்றி இல்லை, இல்லை அது பாமர மக்களுக்குமானது என்றாக யாவரும் புரியும், இரசிக்கும் வடிவத்தில் மாற்றியமைத்தவர். இத்தகைய மாற்றத்திற்கான அடிக்கல்லை நாட்டியவர், உயரங்களைத் தொடும் பேச்சுமனைகளைக் கட்டியவர் சாலமன் பாப்பையா என்பதை யாராலும் மறுக்க முடியாது.

புராணம் இதிகாசம் ஆன்மீகம் என்றாக நடைபெற்று வந்த பட்டி மன்றத்தை சமூகப் பிரச்சனைகள் என்றாக அன்றாட மக்கள் சந்திக்கும் விடயங்களை உள்ளடக்கியதாக அமைத்து எல்லோருக்கும் பொதுவானதாக மாற்றியவர். இதற்குள் சமூகத்திற்குத் தேவையான முற்போக்கு கருத்துகள் நிச்சயம் இருக்கும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் சமூகத்திற்கான முற்போக்குச்சிந்தனைப் பட்டிமன்றப் பேச்சாளராக அறிமுகப் படுத்தப்பட்டு, தலைமையாளராக உயர்த்தப்பட்டு மரணிக்கும் வரை சுரம் மாறாது பல இராகங்களை பாடியவர், பட்டி மன்றங்கள் நடாத்தியவர். ஆம் இவரின் பட்டிமன்றங்கள் அப்படித்தான் அமையும். ஒரு இசைப் பிரவாகம்போல் பலரையும் கட்டிப் போட்டுவைக்கும்.

“பண்டிதர்”களுக்கு மட்டுமே உரியதாக இருந்த இலக்கியப் பட்டிமன்றங்களை, சாதாரண மக்களும் ரசிக்கும்படி குடும்ப வாழ்வியல் மற்றும் சமூகத் தலைப்புகளாக மாற்றிப் புரட்சி செய்தார் என்பது இவரின் பட்டி மன்றங்களைக் கேட்டவர்களின் தீர்ப்பாகும்.
ஒரே தொலைகாட்சி நிறுவனத்தில் தொடர்ச்சியாக 30 ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ச்சிகளை தொய்வின்றி தொடர்சியாக நடாத்தியவர். 60 ஆண்டுகாலப் பேச்சாளராக பேராசரியராக வாழ்ந்தார் என்பதை விட தமிழ் இலக்கியத்தை செதுக்கி வழப்படுத்தினார் எனலாம்.

மிகவும் ஏழ்மையான குடும்ப சூழலில் பிறந்து எளிமையான மனிதராகவே வாழந்து காட்டியவர். விளிம்பு நிலை மக்களின் பிரச்சனைகள்தான் இவரின் அடிநாதப் பேச்சாகவும் பட்டி மன்றமாகவும் அநேகமாக அமைந்திருந்தன.

மனிதர்கள் விலங்கினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் சிரித்தல், புன்னகைத்தல், நகைச்சுவையாக உரையாடுதல் என்பதையும் மூலதனமாக்கி இதற்குள் ஆழமான கருத்துகளை உள்ளடக்குதல் என்றான சுவாரசியங்களை அறிவு பூர்வமாக இணைத்து. தனக்கென ஒருவகைப் பாணியை அமைத்து தனியான குரல் வளத்தையும் இணைத்து குறியீட்டுப் பேச்சாக தன்னை எளிமைப்படுத்தி பேசியவர்.

தொலைக்காட்சி பட்டிமன்றங்கள் மூலம் உலகெங்கும் உள்ள தமிழர்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்தார். நகைச்சுவை




கலந்த பேச்சும், நடுநிலையான தீர்ப்புகளும் இவரது தனித்துவ அடையாளங்களாகும்.

தமிழர் திருநாள்கள் தோறும் தொலைக் காட்சியில் ஐயாவின் பட்டிமன்றத்தின் நேரலையை கேட்டு இரசிப்பதற்கு ஒரு பெரும் கூட்டத்தை காத்திருந்து குழுமி இருக்கச் செய்தவர். ஒரு வகையில் பட்டி மன்றம் ஒரு விவாத மேடைகளாக இருந்த படியால் பெண்கள் அதிகம் இதில் நேரடியாக நிகழ்வுகளில் பார்வையாளராக கலந்து கொள்வது குறைவு என்றான தமிழ்ச் சூழல் நிலவியதை உடைத்தவர்.

பட்டிமன்றம் விவாத அரங்கு பற்றி அதிகம் பெண்கள் கலந்துகொண்டு உரையாடுவதில்லை என்பதான ஆண் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுகளை உடைத்து பெண்களை பெருந்திரளாக பார்வையாளராக கலந்து கொள்ள இணைய வைத்தவர் என்றால் அது சாலமன் பாப்பையா ஐயாவைத்தான் சேரும்.

இதற்கு, இந்த பட்டி மன்றத்தின் கருப்பொருள் இதில் பேச்சாளர்களாக கலந்து கொள்பவர்களின் பண்பட்ட சமுதாயக் கருத்துகளை இணைத்து அதற்கு தலைமையை அமைத்து அவர் செயற்படும், அளந்து பேசும் அந்த பண்பே பிரதான காரணமாகும்.

பேராசியர்கள், தமிழ் அறிஞர்கள் மட்டுமே மேடையேறிவந்த பட்டிமன்ற சூழலை உடைத்தவர். இவர்களுக்கும் அப்பால் பேச்சுவல்மையை வெளிப்படுத்தும் பலதுறைத் திறமையுள்ள வல்லுனர்களையும் தனது தலைமையின் கீழ் பேச்சாளர்களாக மேடையாளராக உருவாக்கி அதனை அனுமதித்து வாய்பளித்த பேறறிஞர் இவர்.

இதில் மிக முக்கியமானது சம அளவில் பெண்களையும் பேச்சாளராக தனது அரங்கிற்குள் அழைத்து வந்தவர்.... வாய்ப்பளித்தவர்... வாழ்த்தியவர்.... ஊக்கப்படுத்தியவர்.....

பல்கலைக் கழக, கல்லூரிப் படிப்பை முடித்த இளம் பேச்சாற்றல் உள்ள இளைஞர்களையும் அனுபவம் மிக்க பேச்சாளர்களை ஒருங்குசேர ஒரே மேடையில் ஒரே தலைப்பில் அமர்த்தி சகலருக்கும் வாய்ப்பு என்றாக களம் கொடுத்து சமநிலையைப் பேணியவர்.

இவரின் பட்டி மன்றங்கள்தான் இரவு நேரம் சென்று 10 மணிக்கு பொது இடங்களில நடைபெற்ற போதும் குடும்பமாக பெண்களும் இணைந்து கேட்டு களித்த சம்பவங்களை அதிகரிக்கவும் செய்தது.

பட்டிமன்றத்தின் இறுதியில் தீர்ப்பு என்றாக தொகுப்பு வழங்கும் போது மேடையில் பேசப்பட்ட விடயங்கள் வெளிப்படுத்தல்களின் அடிப்படையாக வைத்து சரியான கருத்தை மேலோங்கச் செய்யும் வகையிலான தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி இவர்.

இவரின் முன்பு சமூகச் சட்டங்கள் என்றும் தோற்றுத்தான் நின்றன. அவ்வளவு சமூக அறம் இவரின் தீர்ப்புகளில் இருக்கும். இவரின் பிறப்பும் வாழ்வும் இதற்கு அடிப்படையாக அமைந்ததாகவும் கொள்ளலாம்.

நகைச்சுவை கலந்த பேச்சும், நடுநிலையான தீர்ப்புகளும் இவரது தனித்துவ அடையாளங்களாகும். திருக்குறளுக்கு பாமர மக்களும் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழ் உரை எழுதினார். கூடவே புறநானூறு புதிய வரிசை வகை, கம்பராமாயணம் உரை என்றாக நூல்களும் பல கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

திரைப் படத்துறையில் நடிகராகவும் இயல்பாக நடிப்பை வெளிப்படுத்தியவர் “அங்கவை, சங்கவை” தந்தையாக.

இவரின் இத்துறை திறமைகளுக்காக தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது 2000ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவருக்கான இந்திய அரசின் மிக உயரிய குடிமை விருதுகளில் ஒன்றான பத்மசிறீ விருது 2021ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

பொதுவாக உரையாடல்கள் என்றான விவாதம் பட்டி மன்றம் பாட்டு மன்றம் கதை சொல்லும் மன்றம் வில்லுப்பாட்டு பிரசங்கம் என்றாக தகவல்கள் அதிகம் உள்ள அரங்கை அதிகம் தேடிப் பார்க்கும் கேட்கும் என்னைப் போன்ற பலரின் முதல் தெரிவாக சாலமன் ஐயா இருந்தார்.

இதனால் அவரின் 90 வயது வாழ்க்கை எமக்கு விட்டுச் செல்லும் பொக்கிசங்கள் இன்னும் வாழும் தமிழ் கூறும் நல்லுலகில் இவரின் பெயர் தமிழின் பண்பாட்டு வளர்ச்சியிற்கு வலுச் சேர்க்கும். அது எம்மையும் பேசவும் பழக்கும், பேசவும் வைக்கும், கைதட்டல்களை வாங்கவும் செய்யும்.

இவை அனைத்திற்குள்ளும் ஒரு பாப்பையா எம்முள் இருந்து கொண்டுதான் இருப்பார். ஐயாவிற்கு எமது நெஞ்சம் நிறைந்த அஞ்சலி மரியாதை வணக்கங்கள்.




எனது குருவாகிய தாத்தா, ஒரு பணக்கார வீட்டுக்கு வகுப்பு எடுப்பதுண்டு. அது எமது வீட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில். அதனால் ஒவ்வொரு சனி ஞாயிறு கிழமைகளில் காலையில் புறப்பட்டு நடந்து சென்று அங்கு அந்த வீட்டுப் பையனுடன் சேர்ந்து படித்துவிட்டுத் திரும்புவோம். இது கிட்டத்தட்ட ஒரு வருடம் தான் நடந்தது. அதன் பிற்பாடு சுகவீனம் காரணமாக எனது (குரு) தாத்தா இறந்து விட்டார்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு பின்புறம் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் "அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்" எனும் ஒரு கர்நாடக சங்கீத இசைப் பாடசாலையை திரு. பாலசிங்கம் சார் அவர்கள் நடாத்தி வந்திருந்தார்.
தொடர்ந்து இசையைக் கற்றுக் கொள்வதற்காக நானும், எனது அண்ணாவும் அங்கே சேர்க்கப்பட்டோம். அந்த நேரத்தில் அங்கு மிருதங்கம் கற்பித்துக் கொண்டிருந்தவர் திருவாளர் பாக்கியநாதன் சார் அவர்கள். அவர்களிடம் தொடர்ந்து கற்றுக்கொண்டோம்.

அதனைத் தொடர்ந்து திருவாளர் சிதம்பரநாதன் சார், திருவாளர் மகேந்திரன் சார் அவர்களிடம் கற்றுக் கொண்டோம். அங்கே கற்பதற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு எமது குடும்பத்தாரின் பொருளாதார வசதிகள் இடம் தரவில்லை. அந்த அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் நிர்வாகத் தலைவர், திருவாளர் பாலசிங்கம் சார் அவர்களுக்கு இது புரிந்திருந்தது.

உங்களால் எப்போது முடியுமோ, அப்போது தாருங்கள் என்கிற ஒரு ஒப்பந்தம் அவரது "கண் பார்வையினால் எழுதப்பட்டது தான்". அவர் அன்று பண விடையத்தில் கண்டிப்பாக இருந்திருந்தால், எனது கர்நாடக இசை உலகம் எப்படி மாறி இருக்கும் என்று எனக்கே தெரியாது.

பின்னர் நான் ஒரு கலைஞனாக மாறிய போதும் கூட அந்தக் கடனை என்னால் அடைக்க முடியவில்லை. பெரும்பாலுமான எமது கலைஞர்கள் அப்படிப் பட்டவர்கள்தான், "அன்றாடம் காய்ச்சிகள்". ஆனால் அப்படி இருந்தாலும் பொருளாதார நலிவை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "மலர்ச்சியாக" உலா வருவோம்.

எப்போ நான் வெளிநாடு வந்தேனோ, வந்ததும் முதற் கடமையாக, திருவாளர் பாலசிங்கம் சார் அவர்களுக்கு எனது பணத்தை அனுப்பி வைத்தேன். அதை அவர் எல்லா ஆசிரியர்களிடமும் காட்டி "பெருமைப் பட்டுக் கொண்டார்". தனது மாணவன் தன்னை மறக்கவில்லை என்று. அப்போது கூட அவர் பணத்தை ஒரு பொருட்டாகப் பார்க்கவில்லை, தனது மாணவனின் மனதையே பார்த்தார்.

மிருதங்கம் கொஞ்சம் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, டோலக் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கொஞ்சம் பாடல்களுக்கும் வாசிக்கும் பக்குவமும் அடைந்திருந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் நல்லை ஆதீன பிரதம குருக்கள் அவர்களின் சீடரான திருவாளர் எஸ். கணேசசுந்தரம் (சித்தப்பா) அவர்களது பிரசங்கத்திற்கு வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது.

உங்கள் எல்லோருக்கும் தெரியும் பிரசங்கம் என்றால் ஒவ்வொரு கடவுள்களினதும் கதையை சுவாரஸ்யமாக சொல்வது, அந்த சொற்பொழிவிற்கு இடையே பல சிறிய பாடல்கள், வாழ்த்து பாடல்கள், தேவாரங்கள் பாடுவார்.

இந்தப் பாடல்களுக்கு வாசித்தால் போதும். அந்த 12வது வயதிலேயே சம்பளம் வாங்கித் "தொழில்" செய்ய ஆரம்பித்தேன் என்பதை இப்போது நினைக்கும் போது சிரிப்பாகவும், வியப்பாகவும் இருக்கின்றது.



அவரது நிகழ்வுகளுக்கு ஒரு முழுமையான வாத்தியக் கலைஞர் அவசியமற்றது. ஏனென்றால் இடையிடையே பாடும்போது பக்கவாத்தியம் வாசிப்பது தானே. அதற்கு மாணவர்களாகிய நாங்களே போதுமானதுதாயிருந்தது. அதில் அவருக்கு ஆதாயம் என்னவெனில் குறைந்த சம்பளத்தில் எம்மைத் தமது நிகழ்வில் இணைத்துக் கொள்ளலாம், எனக்கும் மகிழ்ச்சி என்னவெனில், எனது குறைந்த வயதிலேயே சம்பாதிக்கிறேன் என்பது.

இப்படித்தான் ஒரு முறை தெல்லிப்பளையில் ஒரு கோவிலில், பத்து நாட்கள் தொடர்ச்சியாக நடந்த ஒரு திருவிழா. அங்கே 10நாட்களும் எங்களது கதாப்பிரசங்கம் நடந்தபடியால், அவர் பத்து நாளுக்குரிய பணத்தைச் சேர்த்துத் தந்தார். அது ஒரு நூறு ரூபாயாக ஞாபகம். அந்தப் பணத்தைக் கொண்டுதான் நான் ஒரு மிருதங்கம் வாங்கினேன். அதுவரைக்கும் மிருதங்க வாசிப்பானது எல்லாம், எனது "மண்டையும், பாத்திரங்களும், மேசை, கதிரைகளும்" என்றுதான் இருந்தன.

இதற்கிடையே ஒரு முறை மாத்தளையில், "ரத்தோட்ட" என்னும் இடத்திலும் ஒரு கோவிலில் பத்து நாட்கள் சென்று வாசித்தேன். அப்போதுதான் இலங்கையில் மலையும், ஆறுகளும் இருப்பதனை நேரில் கண்டு களித்து ரசித்தேன். தினந்தோறும் அந்தக் கோவிலுக்கு பக்கத்தில் உள்ள ஆற்றுக்குச் சென்று கும்மாளம் அடித்துவிட்டு வருவோம். இதெல்லாம் கிட்டத்தட்ட எனது 13 அல்லது 14 வயதாக எனக்கு ஞாபகம். இவையெல்லாம் எமது பள்ளி விடுமுறைகளில் தான். இன்றைய கணக்குப்படி விடுமுறைப்பயணம். ஆனால் அன்றைய நிலவரப்படி அது ஒரு "தொழில்". இதுவெல்லாம் ஒரு "தொழில் இரகசியம்". வெளியில் சொல்லிவிடாதீர்கள்.



ஒரு நாள் அங்கு அந்தக் கோவிலில் பிரசங்கம் முடிந்தவுடன் ஒரு சம்பவம் நடந்தது. அதை என்றுமே மறக்கமுடியாது. கோவில் ஐயர் பிரசாதம் கொடுத்த போது எனக்கு கிடைக்கவில்லை. அதனால் நான் கொஞ்சம் சத்தமாக "அய்யா எனக்குப் புக்கை கிடைக்கவில்லை" என்றதுதான் தாமதம், அங்கிருந்த எல்லோரும் சிரித்து விட்டார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னைக் கூட்டிச் சென்றவர் ஓடி வந்து என் வாயை பொத்தினார். பின்பு தனியாக அழைத்து "இரகசியமாக" விளங்கப்படுத்தினார். சிங்களத்தில் "புக்கை" என்றால் பின்பகுதி என்று அர்த்தமாம். அதாவது முதுகல்ல, முதுகு கீழ் உள்ள பகுதி. "பொங்கல்" என்றுதான் சொல்ல வேண்டுமாம். அந்த அரிய சம்பவத்தின் பின்னர் என்னை நானே திருத்திக்கொண்டேன். **தொடரும்......**

**26-09-2026இல் ஒஸ்லோவில் நிகழ்ந்தேறிய குட்டி மாஸ்ரரின் "நாதாந்தம்" இசைப்பள்ளியின் 26வது ஆண்டுவிழா பதிவுகள்.**





# “விதி வீதியின் கைகளிலா? வீதியே விதியை மாற்றலாமா?”




வைத்திய கலாநிதி பா.யூடி ரமேஷ் ஜெயக்குமார் (படங்கள்:தமயந்தி)

ஈழத்தமிழர்கள் கடந்து வந்தது கரடுமுரடான பாதை. இது கடந்த 30ஆண்டு உள்நாட்டு யுத்தம், 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை, அவ்வப்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், 2025இல் ஏற்பட்ட “டித்வா” புயல், மழை, மண் சரிவு என்ற எமது மக்களின் கடந்த கால வரலாறு. இழப்புகள், அழிவுகள், கைதுகள், காணாமல்ப் போனோர், உள்நாட்டில் அகதி முகாம் வாழ்க்கை, புலம்பெயர் தேச வாழ்க்கை, பொருளாதார இழப்புகள், கண்ணி வெடிகள், மிதிவெடிகள், மீள்குடியேற்றம், இராணுவ ஆக்கிரமிப்பு, சிறுவர் போராளிகள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்ற இந்த நீண்ட பட்டியல் 2009 உடன் ஓரளவு விடை பெற்றாலும், இன்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களும், செயற்கை அனர்த்தங்களும், வயதுக்கு முந்திய உயிரிழப்புகள், உடற்காயங்கள், அங்கவீனம், பொருளாதார இழப்பு, சமூகச் சீரழிவுகள் என்ற முற்றுப்பெறாத அவல வாழ்க்கை தொடரவே செய்கிறது.

### போருக்கு பிந்திய அனர்த்தங்கள்

2009 முள்ளிவாய்க்கால் “மணிப்பாம்” அவலங்களுடன் போர் விடை பெற்றாலும், வீதி விபத்துக்கள், தற்கொலை மரணங்கள், நீரில் மூழ்குதல், வாழ்வெட்டு குழுக்களினால் ஏற்படும் அனர்த்தங்கள், இளவயது இதய தாக்குதல்கள், புற்று நோய்கள் போன்றவற்றால் கணிசமான இனப்பெருக்க வயதுக்குரிய கட்டிளமைப் பருவத்தினர், இன்னும் என்னும் உயிரிழப்புக்கு உள்ளாகும் அவலம், நாடு தழுவி தொடர்கதையாக தொடர்கிறது.

### வீதி விபத்துகளும் அதன் அனர்த்தங்களும்

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வீதி விபத்துக்கள் ஆண்டுதோறும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மரணங்கள் மிகவும் குறைவு அல்லது அரிது என்றே கூறலாம். யுத்தத்திற்கு பின்னரான காலம் 2009இல் இருந்து தொடர்கதையாக தொடர் இளவயது இழப்பிற்கான முதலாவது காரணமாக அமைவது வீதி விபத்துக்கள் ஆகும்.

பொருளாதாரத்தடை நீக்கப்பட்டு உலக சந்தை திறந்து விடப்பட்டது. புலம்பெயர் உறவுகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளுக்கு உடனடியாக நிதி உதவி செய்தது, வீதிகள் குன்றும் குழியுமாக இருந்த நிலை மாறி “காப்பெட் (Capped)” வீதிகளாக மாற்றப்பட்டமை மது, போதைப் பொருள் சர்வ சாதாரணமாக நுழைந்து கொண்டது. இந்திய சினிமா பாணி விளம்பரங்களின் ஆதிக்கம், கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் லீசிங் வருகை ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது இரண்டு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் இந்திய தயாரிப்பு வாகனங்களின் கொள்வனவு என்பன இக்காலத்தில் வீதி விபத்துகளுக்கு முதன்மை காரணமாக இனம் காணப்பட்டன.

பலவீனமான சாரதி அனுமதி பத்திரப் பரிட்சைகள், பயிற்றுவிப்பு, பின் கதவுகளால் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், போக்குவரத்து போலீசாரின் செயத்திறன் நகரோடு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டமை, கிராம, ஊர் வீதிகள் யாவும் விவேகம் அற்ற இளைஞர்களின் வாகனச் செலுத்துகையால் நாள்தோறும் இலங்கையில் பல்வேறு விபத்துக்கள் கண்முன்னே நடந்திருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்துப் பொது வைத்தியசாலைகளிலும் “அவசர விபத்து சேவை” பிரிவுகள் பல நூறு மில்லியன் ரூபாய் நிதியுதவியால் திறக்கப்பட்டு விபத்துக்கு பின்னரான மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

16.09.2026 புதன்கிழமை இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் 600 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் ஜனாதிபதியின் பிரசன்னத்தில் அவசர விபத்து பிரிவிற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இங்கு வீதி

விபத்து குறைப்பு அல்லது தவிர்ப்பிற்கு பதிலாக மருத்துவ சேவையை வலுவூட்டல் மட்டும் கவனத்தில் கொள்ளப்படுவது கவலைக்குரியது.

**வீதி விபத்துக்கள் குறைப்பு பொறிமுறைகள்**

"வருமுன் காத்தல்" என்பது மருத்துவத் துறையின் மகுட வாக்கியமாகும். வீதி விபத்துக்களால் ஏற்படும் அனர்த்தங்கள் இதில் அடங்கும்.

இலங்கையில் "உலகவங்கி குழுவால்" மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் ஐக்கியநாடுகள் சபையின் "மில்லேனியம்" அபிவிருத்தி இலக்குகள் பரிந்துரையின் பின்பும் விபத்துக்களால் ஏற்படும் அனர்த்தங்களை அடுத்த 10 ஆண்டுகளில் 50 வீதம் குறைக்க எதிர்பார்க்கப் படுகிறது. ஆண்டுதோறும் இலங்கையில் நான்காயிரம் வகையான பாரிய விபத்துகளில், 3000 உயிரிழப்புக்கள், 8000 பாரிய காயங்கள் ஏற்படுவதால், பாரிய பொருளாதார, வாழ்வாதார இழப்புகள் ஏற்படுகின்றன.

இவை கடந்தகால அனர்த்தங்களோடு வாழும் ஈழத் தமிழர்களுக்கு பாரிய சுமைகளாகும். இவர்களுக்கு சரியான இடையீடுகள் ஏக காலத்தில் கிடைக்காத போது, நாங்கள் இன்னும் இன்னும் அப்பாவி உயிர்களையும், அவர்தம் உடமைகளையும் இழக்கும் துர்ப்பாக்கிய கதை தொடர்கதையாகவே தொடரும்.

**கிளிநொச்சி நகர் ரொட்டரி கழகம்**

பல்வேறு சமூகப் பணிகளோடு "ரோட்டரி கழகம்" வீதி விபத்துக்களுக்கான இடையீடுகள் குறித்து கடந்த சில வருடங்களாக பல்வேறு ஆக்கபூர்வமான செயல்பாடுகளை முன்னெடுத்து வருவது காலத்திற்குத் தேவையானதாகும். கிளிநொச்சி நகர ரொட்டரி கழகத்திற்கு எங்கள் சிரம் தாழ்த்திய அன்பின் பணிவுகள். இவர்களின் முயற்சிகளுக்கு மகுடம் வைத்தார் போல் "வீதி பாதுகாப்பு நிறுவனம்" அமையப்பெற்று அதற்கான பல்வேறு முன்னாயத்த வேலைகளும் ஏக காலத்தில் நடந்தேறுவது சிறப்பானது.

மாநாடுகள், அரசியல் தலைவர்களை, அதிகாரிகளை, ஆளுநரை, வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு உள்ளூர், வெளியூர் மட்டங்களுடனான சந்திப்புகள், காணி பெற்றுக்கொண்டு அதன் நில அளவை, சஞ்சிகை வெளியீடுகள், தலைமைத்துவ அன்பளிப்புகள், பாடசாலை ஓவியப் போட்டிகள் என "ரொட்டரி கழகம்" தனது செயற்பாடுகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக செயற்படுத்த தொடங்கியுள்ளது.

**அன்னை இல்லமும், அலோசியஸ் அங்கிளும்**

(யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டு தற்போது பேர்கனில் வதியும் ஓய்வுபெற்ற அலோசியஸ் சந்தியாப்பிள்ளை அங்கிள்) கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள தனது நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னரே, குழந்தைகளுக்கான பகல் பராமரிப்பு, முன்பள்ளி



என்பவற்றை நோர்வே தரத்தில் உருவாக்கி, அதனைத் தனது நிதி மூலம் செயல்படுத்தி வருகிறார்.

இவரது ஆழ்மனதில் இருந்த கவலை, இலங்கையில் குறிப்பாய் கிளிநொச்சியில் அவர் வருகைதரும் போதெல்லாம் காணுகின்ற திகைப்பூட்டும் "வீதி விபத்துக்களின்" அவலங்களின் கதைகள். அலோசியஸ் சந்தியாப்பிள்ளை அங்கிள் அத்துடன் நிற்கவில்லை. இதற்கான செயற்திட்டங்களை ஆரம்பிக்க கிளிநொச்சி நகர ரொட்டரி கழகத்துடன் ஏற்படுத்திய வலுவான "பின்வலுப்பிணைப்பு" கிணறு அறுகுபோல் வேரூன்றி ஆழ்வேர் விழிதெளிந்து நிற்கிறது.

ரொட்டரிக் கழக உறுப்பினர்களின் நோர்வே நோக்கிய பயணம் வெறும் வார்த்தைகளால் செயல்படுத்தி நிதி மூலதனம், நிதி இல்லாத திட்டங்கள் என்பன யாவும் "கானல் நீரே" அலோசியஸ் அங்கிள் மற்றும் அவரது சமூக உறவுகளதும் அயராத முயற்சியால் 15பேர் கொண்ட "ரொட்டரி அணி" எதிர்வரும் அக்டோபர் 01 முதல் 15 வரை, நோர்வே, யேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பல்வேறு கருத்தரங்கள், சந்திப்புகள், செயற்திட்ட ஆலோசனைகள், பல்கலைக்கழகத் தரிசிப்புகள் போன்ற பல்வேறு விதமான செயற்பாடுகளை தத்தம் நாட்டு அமைப்புகளுடன் சேர்ந்து செயல்படுத்த உள்ளது. இவை பேர்கன், ஒஸ்லோ, பாரிஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் அந்நாடுகளில் புலம்பெயர் அமைப்புகள், நிறுவனங்கள், அரச பிரதிநிதிகள் உட்பட பலதரப்பட்ட அமைப்புகளுடன் அமையப்பெறவுள்ளது.

**புலம்பெயர் தமிழ் உறவுகளே...!**

தொப்புள் கொடி தொடர்புகள் இன்றும் பிணத்தின் அவல கதைகளுக்கு காற்புள்ளியல்ல, முற்றுப்புள்ளியாக அமைய இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள், நிதி உதவிகளை தாராள மனதுடன் தந்துதவ எங்களோடு இருகரம் கோர்த்து ஓர் அணியாக செயல்பட அழைக்கின்றோம்.
"காலத்தால் செய்த நன்மை சிறிதெனினும் ஞானத்தால் மாணப் பெரிது"

# நாம் ஒன்றிணைந்து கட்டியெழுப்புவது - நோர்வேயிலும் இலங்கையிலும்



ஜெரோன் ஜோசப்
பேர்கன் நகரசபை உறுப்பினர் - நோர்வே தொழிலாளர் கட்சி

ஒரு முதிய நோயாளர் மருத்துவர் கூறுவதைப் புரிந்துகொள்ள முடியாதபோது, ஒரு தன்னார்வ அமைப்புக்கு கூடுவதற்கு இடமில்லாதபோது, அல்லது ஒரு தொழிலாளர் தமது உரிமைகள் என்னவென்று நிச்சயமில்லாதபோது, அரசியல் தொலைவில் நடைபெறும் ஒன்றல்ல. அது நாளாந்த வாழ்க்கையின் பாதுகாப்பைப் பற்றியதாகிறது.

நோர்வேத் தமிழ்ச் சமூகத்தின் முதல் தலைமுறை, உழைப்பு, குடும்ப வாழ்க்கை மற்றும் தன்னார்வப் பணிகளின் மூலம் நோர்வேயையும் தமிழ்ச் சமூகத்தையும் கட்டியெழுப்புவதற்குப் பங்களித்துள்ளது. இன்று அந்தத் தலைமுறையில் பலர் வயது முதிர்ந்து வருகின்றனர். அதனால் மொழி, சுகாதாரம், முதியோர் பராமரிப்பு மற்றும் சமூக உறவு தொடர்பான கேள்விகள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

அரசியலில் எந்தப் பெறுபேறும் ஒருவரால் மட்டும் உருவாக்கப் படுவதில்லை. உள்ளூர் மக்கள், தன்னார்வலர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்படும் போதுதான் மாற்றம் ஏற்படும். மக்களின் அனுபவங்களைக் கேட்டு, அவற்றை நகரசபைக்குக் கொண்டு சென்று, தேவையான ஆதரவை உருவாக்குவதே எனது பணி.

### பொதுச்சேவைகளை அணுகும்போது பாதுகாப்பு

நோர்வே மொழியை நன்றாகப் பேசுபவர்களுக்குக்கூட, கடுமையான நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதற்குத் தேவையான மருத்துவச் சொற்களையும் சிக்கலான தகவல்களையும் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். பிள்ளைகளும் உறவினர்களும் மருத்துவ மொழி பெயர்ப்பாளர்களாகப் பயன்படுத்தப்படக் கூடாது.

அதனால் சுகாதாரச் சேவைகளில் தகுதியான மொழி பெயர்ப்பாளர்கள் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என தொழிலாளர் கட்சி சார்பில் நாம் முன்மொழிந்துள்ளோம். சரியான தகவலைப் புரிந்துகொள்வது ஒரு மேலதிக வசதி அல்ல. அது நோயாளியின் பாதுகாப்பிற்கும் சரியான சிகிச்சையைப் பெறுவதற்கும் அடிப்படையானது.

ஒரு நல்ல முதுமை என்பது மருந்துகளையும் பராமரிப்பையும் மட்டும் பற்றியது அல்ல. மற்றவர்களைச் சந்திப்பது, செயற்பாடுகளில் பங்கேற்பது மற்றும் தனிமையைத் தவிர்ப்பது என்பனவும் முக்கியமானவை.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் பயன்படுத்தும் சேவைகளை ஒன்றிணைப்பது சில சந்தர்ப்பங்களில் சரியானதாக இருக்கலாம். வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, வலுவானதும் நிலையானதுமான ஒரு சேவையை உருவாக்க அது உதவலாம். ஆனால் மையப்படுத்தல் என்பது வெறுமனே செலவைக் குறைப்பதற்கான மற்றொரு பெயராக மாறக்கூடாது.

பயணத் தூரம், போக்குவரத்து வசதி, மொழி மற்றும் தகவல் கிடைக்கும் முறை என்பன முதியவர்கள் புதிய சேவையை உண்மையில் பயன்படுத்த முடியுமா என்பதைத் தீர்மானிக்கலாம். அதனால் பணியாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சேவையைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் கருத்துகள் கேட்கப்பட வேண்டும். உள்ளூர் சேவையை இழக்கும் அனைவருக்கும் நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய ஒரு மாற்றுச் சேவை உறுதி செய்யப்பட வேண்டும்.

மின்சாரம் அல்லது தொலைத்தொடர்பு நீண்டநேரம் செயலிழந்தால், முதியவர்கள், நோயாளர்கள் மற்றும் வீட்டிலேயே உதவி பெறுபவர்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் நகரசபையிடம் இருக்க வேண்டும். அவசர-நிலைத் தயார்நிலை, சமூகத்தின் உதவி அதிகம் தேவைப் படுபவர்களுக்கும் செயற்பட வேண்டும்.

### சந்திப்பு இடங்கள் சமூகத்தை உருவாக்குகின்றன

தமிழ் அமைப்புகளில் செயற்படுபவர்கள், குறைந்த செலவில் பயன்படுத்தக்கூடிய சந்திப்பு இடங்கள் எவ்வளவு முக்கியம் என்பதை நன்கு அறிவார்கள். ஒன்றுகூடுவதற்கான இடமின்றி மொழி, கலாசாரம், விளையாட்டு, சமயம் மற்றும் சமூக உறவுகளைப் பேணுவது கடினம்.

பழைய ஃபானா தீயணைப்பு நிலையத்தின் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந்தபோது, உள்ளூர் தன்னார்வலர்கள் அதை “Paradis Nabolagshus” என்ற மக்கள் சந்திப்பு நிலையமாகப் பாதுகாக்கப் போராடினார்கள். அவர்களின் முயற்சிக்கு அரசியல் வழியாக உதவி செய்து, கட்டிடம் விற்கப்படாமல் நகரசபையின் உரிமையிலேயே தொடர வேண்டும் என்ற முன்மொழிவை நான் முன்வைத்தேன். 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் பேர்கன் நகரசபை அந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.

இது ஒருவருடைய வெற்றி அல்ல. உள்ளூர் மக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் பல அரசியல் தரப்புகள் இணைந்து உருவாக்கிய பெறுபேறு. மக்களின் வாழ்க்கைக்குப் பெறுமதியுள்ள இடங்களைப் பாதுகாக்க அரசியல் எவ்வாறு உதவ முடியும் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## தொழில் வாழ்வில் உரிமைகள்

முதல் தலைமுறையைச் சேர்ந்த பலர் கடினமான வேலைகள், நீண்ட வேலைநேரம் மற்றும் குடும்பப் பொறுப்புகளுடன் தமது வாழ்க்கையை நோர்வேயில் கட்டியெழுப்பினர். தொழிற்சங்கப் பிரதிநிதியாகப் பணியாற்றிய எனது அனுபவம், பணியிடப் பாதுகாப்பு ஏன் தெளிவான உரிமைகளின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை எனக்குக் கற்றுத்தந்துள்ளது. அது ஒரு நல்ல மனமுள்ள தொழில் வழங்குனரை மட்டும் சார்ந்திருக்கக்கூடாது.

கூட்டு ஒப்பந்தம் சம்பளத்தை மட்டும் பற்றியது அல்ல. அது வேலைநேரம், ஓய்வூதியம், ஊழியர்களின் பங்கேற்பு, முன்கூட்டிய உறுதிப்பாடு மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான நடைமுறைகளையும் உறுதி செய்கிறது. ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள சம்பள அளவுகளைப் பின்பற்றுவதாகக் கூறுவது, தொழிற்சங்கத்துடன் செல்லுபடியாகும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை வைத்திருப்பதற்குச் சமமல்ல.

இதனால்தான் பேர்கன் கிறிஸ்தவப் பாடசாலையில் (Bergen Kristne Grunnskole) வழமையான கூட்டு ஒப்பந்தத்தைக் கோரிய ஆசிரியர்களுக்கு நான் மற்றவர்களுடன் இணைந்து ஆதரவு வழங்கினேன். கிறிஸ்தவ விழுமியங்களும் தொழிலாளர்களின் உரிமைகளும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. நம்பிக்கை முக்கியமானது. ஆனால் இரு தரப்பினரின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பாதுகாக்கும் தெளிவான ஒப்பந்தங்களும் அவசியம்.

## ஜனநாயகமும் தாயகத்திற்கான பொறுப்பும்

பல நோர்வேத் தமிழ் குடும்பங்கள் போர், இடப்பெயர்வு மற்றும் மௌனப்படுத்தப்பட்ட அனுபவங்களின் நினைவுகளைச் சுமந்துள்ளன. அதனால் ஜனநாயகமும் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கும் உரிமையும் வெறும் கோட்பாடுகள் அல்ல. அவற்றின் பெறுமதியை நாம் நன்கு அறிவோம்.

அதேவேளை, நோர்வேயிலும் அரசியலில் ஈடுபடும் இளைஞர்கள் வெறுப்புப் பேச்சையும் வன்முறை அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கிறார்கள். கருத்துவேறுபாடு ஜனநாயகத்தின் இயக்குவிசை. அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் நஞ்சு. எவரும் அரசியலில் பங்கேற்பதற்கான விலையாக பாதுகாப்பு எச்சரிக்கைக் கருவியை அணிய வேண்டிய நிலை ஏற்படக்கூடாது.

நான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கேற்றுள்ளேன். உயிரிழந்தவர்களின் நினைவுகளும், உயிர் தப்பியவர்களின் அனுபவங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். இது உண்மை, மனித கண்ணியம், நீதி மற்றும் எமது வரலாற்றை அறிந்துகொள்ளும் உரிமை என்பவற்றுடன் தொடர்புடையது. கடந்தகால உண்மைகளைப் பாதுகாப்பதுடன், இலங்கையில் இன்று வாழும் மக்களின் பாதுகாப்பையும் நாளாந்த வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்கும் நாம் பங்களிக்க வேண்டும். அதனால்தான் நோர்வே வாழ் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் வீதிப் பாதுகாப்பு முயற்சியில் நான் பங்களித்து வருகின்றேன்.

இந்த முயற்சிக்காக நோர்வேயில் அரசியல் தொடர்புகளை உருவாக்கவும், அரசியல்வாதிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் அமைப்புகள் கலந்து கொள்ளும் சந்திப்பைத் தயாரிக்கவும் உதவுகின்றேன். வீதிப் பாதுகாப்புக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான ஒரு நிலையான மையத்தை உருவாக்குவதே நீண்டகால நோக்கமாகும்.

இத்திட்டம் வெற்றிபெற வேண்டுமெனில், தெளிவான பொறுப்புகள், வெளிப்படைத்தன்மை, துறைசார் அறிவு மற்றும் இலங்கையிலுள்ள உள்ளூர் தரப்பினருடனான உறுதியான ஒத்துழைப்பு என்பன அவசியம். நல்லெண்ணத்தை நடைமுறையில் உயிர்களைக் காப்பாற்றக்கூடிய பணியாக மாற்றுவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

2027முதல் 2031வரையான அடுத்த பேர்கன் நகரசபைக் காலத்திலும் தொடர்ந்து பணியாற்ற நான் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளேன். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றேன்.

முதல் தலைமுறையின் உழைப்பு, போர், இடப்பெயர்வு மற்றும் ஒரு புதிய வாழ்க்கையைக் கட்டியெழுப்பிய அனுபவங்கள் அரசியலுக்குத் தேவையான முக்கியமான அறிவாகும். அந்த அனுபவங்கள் குடும்பங்களின் உணவு மேசைகளில் மட்டும் தங்கிவிடக்கூடாது. அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படும் இடங்களுக்கும் அவை சென்றடைய வேண்டும்.

பிரதிநிதித்துவம் என்பது அரசியலில் எத்தனை தமிழ் முகங்கள் தெரிகின்றன என்பது மட்டும் அல்ல. தமிழ் சமூகத்தின் அனுபவங்கள் கேட்கப்படுகின்றனவா, அவை நடைமுறைத் தீர்மானங்களாக மாறுகின்றனவா என்பதே முக்கியமானது. அரசியல் மக்களின் நாளாந்த வாழ்வில் உணரப்படும்போதுதான் அதற்கு உண்மையான பெறுமதி கிடைக்கிறது. ■



படம்: மாற்றம்

# சிந்தனையாளர் சிவலிங்கம்

**மலையக மக்களின் வரலாற்றையும் அவர்களின் உழைப்பின் மீதான ஒடுக்குமுறைகளையும் வெறும் பரிதாபக் கண்ணீராக அல்லாமல், தீர்க்கமான வர்க்க அரசியலாகப் பதிவு செய்த தோழர் மு.சிவலிங்கம் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றுள்ளார்.**



**அருள் கார்க்கி**
ஊடகவியலாளர், பண்டாரவளை
(University of Peradeniya)

ஒரு அரச பாடசாலை ஆசிரியராக, பத்திரிகையாளராக, தொழிற்சங்கப் போராளியாக அவர் பெற்ற நேரடி அனுபவங்களே அவரது எழுத்துகளுக்கு அசைக்க முடியாத பலத்தைச் சேர்த்தன.

அவர் விட்டுச்சென்ற எழுத்துப்பூர்வமான வரலாற்று ஆவணங்கள், மலையகச் சமூகம் தற்காலத்திலும் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களுக்கு எப்போதும் ஒரு உறுதியான திசைகாட்டியாக விளங்கும்.

Estate to State அடிமைத்தனத்தின் பரிணாமம் சமூக விஞ்ஞான அரசியல் கோணத்தில் நோக்கும்போது, மு.சிவலிங்கத்தின் படைப்புகள் எழுப்பும் மிக முக்கியமான கேள்வி தோட்டப்புற



அடிமைத்தனத்தின் தொடர்ச்சியாகவும் அதன் நவீன வடிவமாகவும் அமைகிறது. ஆங்கிலேயக் கொலனித்துவத்தின் கீழ் உருவான "தோட்டப்பொருளாதாரம்" (Plantation Economy) என்பது வெறும் உற்பத்தி மையம் மட்டுமல்ல அது மனிதர்களை ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்போடு பிணைத்துவைத்த ஒரு முழுமையான கட்டுப்பாட்டுச்சமூகம்.

**பிரித்தானிய மூலதனக் குவிப்பிற்காகத் தென்னிந்திய மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கப்பட்டு இலங்கையின் மத்திய மலைநாட்டுத் தோட்டங்களில் குடியேற்றப்பட்ட உழைக்கும் மக்கள், "Estate" என்ற குறுகிய எல்லைக்குள் முடக்கப்பட்டனர்.**

பின்னர் 1948-க்குப் பிந்தைய இலங்கைத் தேசிய அரசுக் கட்டமைப்பு (State), இந்தப் பாட்டாளி வர்க்கத்தின் பிரஜாவுரிமையைப் பறிப்பதன் மூலமும், அவர்களைத் தொடர்ச்சியான இரண்டாம் தரக் குடிமக்களாக ஒதுக்குவதன் மூலமும் அந்தச் சுரண்டலை முறைப்படுத்தியது.

இதுவே "Estate to State" (தோட்டத்திலிருந்து தேசிய அரசிற்கு) என்ற கட்டமைப்புச் சுழற்சியின் ஆழமான பரிமாணத்தைக் காட்டுகிறது. அதாவது, கொலனித்துவக் காலத்தின் கொடூரமான தோட்டச் சுரண்டல், சுதந்திர இலங்கையின் தேசிய அரசுக் கட்டமைப்பிற்குள் மலையக






மக்களைச் சட்டபூர்வமாகவே விளிம்புநிலைக்குத் தள்ளியது. மு. சிவலிங்கத்தின் "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" போன்ற வரலாற்றுப் படைப்புகள், இந்த ஒற்றை வளைவுக்குள் மலையகச் சமூகம் எவ்வாறு சிக்குண்டு, ஒரு நூற்றாண்டைக் தாண்டி வர்க்கரீதியாக எப்படி வஞ்சிக்கப்பட்டது என்பதைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

இலக்கியத்தை வெறும் அழகியல் நுகர்வாகவோ பொழுதுபோக்காகவோ கருதாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அரசியல் ஆயுதமாகக் கையாண்டவர் மு.சி.தோட்டத்தில் நடக்கும் அடக்குமுறைகளுக்கு எதிராக உழைக்கும் மக்கள் பாடிய ஒப்பாரிகளையும் நாட்டுப்புறப் பாடல்களையும் ஆய்வுக்கு உட்படுத்தி, வாய்மொழி வரலாற்றை (Oral History) மீட்டெடுத்தார். எழுத்துரிமையும் முறையான கல்வி வசதிகளும் மறுக்கப் பட்ட ஒரு சமூகத்திற்கு அவர்களின் உழைப்புப் பாடல்களே வரலாற்றுச் சாட்சியங்களாகின.













"மலைகளின் மக்கள்", "ஒரு விதைநெல்", "தேயிலைதேசம்" மற்றும் "வெந்து தணிந்தது காலம்" போன்ற படைப்புகள் மூலம், தோட்டத் தொழிலாளர்களை வெறும் அனுதாபத்திற்குரிய பாத்திரங்களாகக் காட்டாமல், முதலாளித்துவச் சுரண்டலுக்கு எதிராகவும் தொழிற்சங்க ஏமாற்று வேடங்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்த வர்க்க நாயகர்களாகவே நிலைநிறுத்தினார்.




வரலாறு என்பது ஆளுவோரின் ஆவணக் காப்பகங்களில் மட்டும் எழுதப்படுவதில்லை. அது உழைக்கும் மக்களின் வியர்வையிலும் நினைவுகளிலும் தொடர்ந்து வாழ்கிறது என்பதை மு.சிவலிங்கத்தின் எழுத்துக்கள் அசைக்கமுடியாத வாதங்களுடன் மெய்ப்பித்தன.




மலையகச் சமூகம் தனது நிலவுரிமைக்கும், அரசியல் உரிமைக்கும் விடைதேடித் தடுமாறும் இன்றைய கால கட்டத்தில், தோழர் மு. சிவலிங்கத்தின் சிந்தனைகளும் ஆய்வுகளும் வெறும் இலக்கியப் பதிவுகள் அல்ல மாறாக, காலத்தால் அழியாத அரசியல் வரைபடங்களாகும்.



மலையகத்தின் மூத்த எழுத்தாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் நாயகமுமான அமரர் மு. சிவலிங்கம் அவர்களுக்கு 25.09.2026 அன்று தலவாக்கலை நகரசபை வளாகத்தில் பெருந்திரளானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.




அழவேண்டும் என்று தோன்றும், அழ முடியாது. ஏதோ புரிவது போலிருக்கும், ஆனால் அதைப் புரியவைக்க முடியாது. இதயத்துக்குள் கைகளைச் செலுத்தி யாரோ கசக்குவாது போலிருக்கும், வலிக்கிறதா எனச் சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் தோண்டுவது போலிருக்கும். அப்படியோர் உணர்வைச் சில படைப்புகளால் மட்டுமே தரமுடியும். அப்படித்தான் சின்னச் சின்ன ஆசையும் எனக்குள் உணர வைத்தது.

காசிக்குச் சுற்றுலா செல்லும் குழு ஒன்றோடு இணைந்து, லீலா எனும் நடுத்தர வயதுப் பெண்ணும் பயணிக்கிறார். சுற்றிப் பார்த்துக் கொண்டு திரிந்த வழியில் வாரணாசியில் தன் கூட்டத்திலிருந்து காணாமல் போகிறார்.

லண்டனிலிருந்து வந்து காசியில், பல்கலைக் கழகத்தில் நாட்டிய உயர்பட்டப் பேறிற்காகப் பயின்று கொண்டிருக்கும் மகளைப் பார்க்கக் கடந்த இரண்டு வருடங்களாக வரும், காணும் எவரோடும் முடிந்தவரை அவரவர் மொழியில் உரையாடக் கூடிய, பலருக்கும் அறிமுகமான மாதவன் மாஸ்டர் இப்போதும் மகளைப் பார்க்க வைக்கிறார்.

அறிமுகமில்லாத ஊரில் கூட்டத்திலிருந்து விலகி, உடமைகளையும் வழிப்பறிக்காரரிடம் பறிகொடுத்து தனியாக அழுது கொண்டு அமர்ந்திருக்கும் லீலா, அங்கிருந்தவர்கள் மூலம் மாதவன்மாஸ்டருக்கு அறிமுகப்படுத்தப் படுகிறார். மலையாள உச்சரிப்பில் ஓரளவு தமிழ் பறையக்கூடிய மலையாளியான மாதவனும், தஞ்சாவூர் லீலாவுமாக இணைந்து விட்டுப்போன கூட்டத்தைத் தேடத் தொடங்குகிறார்கள்.

வார்த்தைகளையும் எண்ணி எண்ணித் தேர்ந்தெடுத்துப் பேசும், தனக்குள் இறுகி, அந்த இறுக்கத்தை அப்படியே வெளியே பிரதிபலித்து அனைவரிடமிருந்து ஒதுங்கி நிற்கும் லீலாவுக்கும், வாழ்க்கையின் பாதைகள் அனைத்தையும் இயல்பாய் எடுத்துக் கொண்டு பயணிக்கும் மாதவனுக்குமான ஆத்ம உணர்வின் சங்கமங்களும் புரிதலுமே மீதிக் கதை.

அனேகமாக ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒரு குழந்தை உண்டு. அது தன் எதிர்கால வாழ்வு பற்றிய வரைபடத்தை தன் கனவுகளால் வரைந்து கொள்கிறது. ஆனாலும் யதார்த்தத்தில் அந்தக் குழந்தை பற்றியோ அதன் கனவுகள் பற்றியோ யாரும் கண்டு கொள்வதில்லை.

தமக்குத் தமக்குச் சாதகமான வழிகளில் அந்த வாழ்வை நகர்த்திப் பயனடைந்து விடுகிறார்கள் பாவிக்கப் பட்டபின், சக்கையென வெளியே எடுத்துப் போட்ட பின் கனவுகள் கண்ட குழந்தையும் சக்கையும் மட்டுமே எஞ்சுகிறார்கள். அந்த குழந்தை கேட்கும் கேள்விகளுக்கான பதிலை சக்கை தேடத் தொடங்குகிறது. அப்போது தான் என்வாழ்வு என் விருப்பங்கள் என்ற தன் வாழ்வுக்கான தேடலின் வெளி விரிகிறது. தேடல் தொடங்கும் போது இதுவரை தான் தொலைக்கப்பட்ட இடத்திலிருந்து மனிதர்கள் விரும்பியே தொலைந்து போகிறார்கள்.

தமக்குள் இறுகுகிறார்கள். அடுத்தவரை நம்பமறுக்கிறார்கள். அதையும் மீறி அவர்கள் மனதைத் திறக்கும் சாவியை மிகச் சிலர் மட்டுமே இந்த உலகில் வைத்திருப்பார்கள்.

அவர்களால் மட்டுமே தொலைந்தவர்களின் தொலையாத ஆத்மாவைக் கண்டடைய முடியும் நெருங்க முடியும். அப்படித்தான் விரும்பியே தொலைந்து போகும் லீலாவின் மனதைத் திறக்கும் சாவி மாதவனிடமிருக்கிறது.

இப்படியான எதிர்பாராத சந்திப்புகள் தான் இந்தப் பிரபஞ்சம் மறைத்து வைத்திருக்கும் மனித வாழ்வின் இருத்தலுக்கான ரகசியங்கள். லீலா மெல்ல மெல்ல தன் கடந்த காலத்தை சின்னச் சின்ன வார்த்தைகளால் விரிக்கிறார். மாதவன் அதன் பாரிய வலியைப் புரிந்து கொள்கிறார்.



உண்மை சொல்வதானால் வாழ்வை ரசித்து ரசித்து வாழவேண்டும் என ஆசைப்படும் எவர்க்கும் பெரிய பெரிய கோடிகளாலான ஆசைகள் இருப்பதில்லை. அவர்களுக்கு உள்ளதெல்லாம் செலவேயில்லாத சின்னச் சின்ன ஆசைகள். அவற்றைக் கூடப் புரியாத மனிதர்களுடன் வாழ நேரும் போது, ஒரு வாழ்க்கை, அதை வாழும் உடல், அது சுமக்கும் மனம் அனைத்தும் வெந்து நீறாகிக் கொண்டிருப்பது உணரப்படுவதில்லை.

அப்படியானவர்களுக்கு உறவுகளைப் பிரிதலும் காணாமற் போதலும் விடுதலை. விடுதலை பெற்ற மனம் மெதுவாகத் தனக்காக இசைக்கத் தொடங்கும் இங்கும் தொடங்குகிறது.

எவ்வளவு தூரம் இசைகிறது என்பதுதான் வாழ்வின் கொடூர யதாத்தம் நாம் எதை உயிருக்குள் உருகி உருகித் தேடுகிறோமோ அதை அடையும் கணத்தில் ஆத்மா நிறைவு கண்டு அமைதியாகி விடுகிறது.

படத்தில் நாயகி மதுபாலா, கதையின் நாயகன் இந்திரன் என்றதுமே சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது. மிகச் சிறந்த குணச்சித்திர நடிகர் அவர். ஆனால் நாயகனாக என்றதும்... அதுவும் மதுபாலாவுக்கு ஜோடியாக என்றதும் படத்தில் நிச்சயம் ஏதோ இருக்கிறது பார்த்துவிட வேண்டும் என்று காத்திருந்தேன். ஏமாற்றவேயில்லை படம்.

படம் முழுவதும் இரண்டே உடைகள் வழியில் சந்திக்கும் அறிமுகமில்லாமனிதர்கள் கடத்தும் உணர்வுகள், பாசையின்றி பற்றுதல் கடத்தும் மொழி என அத்தனை இதமாகக் காட்சிகளால் மனிதர்களை வடித்திருக்கிறார்கள்.

சொற்ப நேரமே வந்தாலும் அபர்ணா பாலமுரளி, ஜபார் சாதிக் நடிப்பிலும் பாத்திரப்படைப்பிலும் மனதில் நிற்கிறார்கள். குறைந்தளவு வார்த்தைகளுடன் செதுக்கிச் செதுக்கிச் செய்யப்பட்ட நடுத்தர வயதுப் பெண்ணின் அத்தனை உணர்வுகளையும் மனதில் அப்படியே நுழைத்திருக்கிறது வர்ஷா வாசுதேவ் இன் எழுத்து. சின்னச்சின்ன ஆசைகள் நிறைவேறாது போகும் வாழ்வு பெரிய தண்டனை.

# தீராத் தாகம்



அடங்கா விடாயொன்று
வாழ்வின் முகமணிந்து
என்னை விரட்டி விரட்டி
துரத்துகிறது

நானும் கனவெனும் நதியில்
அதன் நிழலைத் துரத்துகிறேன்

எது வேட்டையாடுகிறது
எது இரையாகிறது

கரைபுரண்டோடும் நதியும்
கட்டற்றோடும் நிழலும்
ஒரே கடலை நோக்கி செல்கிறது

தாகம் தணிந்தால் நதி நின்றுவிடும்
தேடல் முடிந்தால்
நானும் முடிந்துவிடுவேன்

ஒருநாள் உள்ளத்தின் கீசாவை
திறந்து பார்த்தபோது
நான் தேடிய கடல் சிறு துளியாய்
எனக்குள்ளே அசைந்தது.

அப்போது புரிந்து கொண்டேன்
வாழ்வென்பது
கரையை மட்டும் அடைவதல்ல
கடலாய் இருந்தும்
தீரா விடாயுடன் இருப்பது.

– ஜமீல் –

# உலக மொழிபெயர்ப்பு நாள் 30.09.2026




உலக மொழிபெயர்ப்பு தினத்தை முன்னிட்டு 30.09.2026 அன்று 'மூன்றாவது கண். உள்ளுணர்வுத்திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள்' இணைந்து முன்னெடுத்த நிகழ்வில் பேராசிரியர் சி.ஜெய்சங்கர் நிகழ்த்திய உரையிலிருந்து.....

மொழிபெயர்ப்புப் பற்றி பலரும் அறிந்திருக்கின்றோம். மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் பற்றி ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறோம். ஆனால் முதல் மொழி போல மொழிபெயர்ப்பும் எங்களுடைய வாழ்க்கையில், அறிவுருவாக்கத்தில், ஆளுவாக்கத்தில், ஆளுமை உருவாக்கத்தில் பங்குபற்றியிருக்கிறது அல்லது செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது என்பதை மிகப் பெருமளவிற்கு அறிந்ததும் இல்லை, உணர்ந்ததும் இல்லை.

நாங்கள் முதன்மொழியை கற்கின்றபோது, பல்வேறு பாடங்கள், பல்வேறு மொழிகளைக் கற்கின்றபோது நாம் தமிழில் படிப்போம். ஆனால் தாகூரை, அவருடைய கவிதைகளை தமிழில் படிப்போம். தோமஸ் அல்வா எடிசனை தமிழில் படிப்போம். அல்லது கறுப்புவெள்ளைப் படத்தை அல்லது இன்று அவரது வண்ணப்படத்தைப் பார்ப்போம். இப்படி பல்வேறு பாடங்களிலும் தமிழைப் படிப்போம்.

உலகத்து பல்வேறு மொழிகளுக்கூடாகவும் பல்வேறு இடங்களிலும் நடந்த அறிவுசார் விடயங்களை, கல்வியைப் படித்துக் கொள்வோம். வெகுசன ஊடகங்கள், புகைப்படங்கள், திரைப்படங்கள் என்கின்ற பல்வேறு வழிகளாகவும் எங்களுடைய அறிவுருவாக்கத்தில் இந்த முதல்மொழியும் மொழிபெயர்ப்பும் இரண்டறக் கலந்த விடயங்களாக இருப்பதை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதன் காரணமாகத்தான் நாம் "மூன்றாவது கண்" உள்ளுணர்வுத்திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் உலக தாய்மொழி தினம் பெப்ரவர் 21, உலக மொழி பெயர்ப்புநாள் 30.09.26ல் கொண்டாடப்படுவதை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

வருடம் முழுவதும் சிறு சிறு அளவில் இவை சார்ந்து முன்னெடுக்கப்பட்ட விடயங்களைத் தொகுத்து ஒரு சிறு விழாவாக இத்தகைய தினங்களில் முன்னெடுப்பது வழமையான விடயமமாக இருக்கின்றது. அதன் பின்னணியில்தான் இந்த உலக மொழிபெயர்ப்புநாளில் நாம் கவனம் செலுத்த வேண்டிய விடயம் என்னவென்றால், தமிழ் அறிவுலகம் உலகத்தின் பல்வேறு மொழிகளிலிருந்தும் அறிவைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் ஈழத்தமிழர்களுடைய பங்கும் பணியும் என்பது ஒரு நீண்ட வரலாறுடையதும், பரந்ததும், ஆழமானது-மான அறிவுப்பண்பு கொண்ட விடயமாகவும் இருந்து வருகின்றது. இதை நாம் ஒரு மீள்பார்வைக்கு கொண்டு வருவது மிக முக்கியாமானதாகும். அப்பொழுதுதான் எங்களுக்கு முன்னவர்கள் எவ்வாறு தன்னார்வத்தினூடாக பெரும் விடயங்களை சாத்தியப்படுத்தியிருக்கிறார்கள், அது எமது அறிவுப்பண்பாட்டுருவாக்கத்திற்கு எவ்வாறு வலுச்சேர்த்திருக்கின்றது என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இன்னும் நாங்கள் இப்பொழுது ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தப் போர், இடப்பெயர்வு காரணமாக ஈழத்தமிழர்கள் பல்வேறு மொழிகளில் பேசுகின்ற இடங்களுக்கும் பரந்து வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் இன்று தங்களை நிலைநிறுத்திக் கொண்டு அந்தந்த நாட்டு மொழிகளில் நிபுணத்துவம் பெற்றுக் கொண்டு அந்த மொழிகளிலிருந்து நேரடியாகத் தமிழுக்கு மொழி பெயர்ப்பது, அந்தந்த மொழிகளில் எழுதுவது என்பது பரவலாகக் காணப்படுகின்றது.

இன்று எல்லா மொழிகளிலிருந்தும் தன்னார்வம் காரணமாக பல்வேறு இலக்கியங்களிலிருந்து அறிவார்ந்த விடயங்கள் வரை மொழிபெயர்ப்புக்களைக் கொண்டு வருகின்றனர். இதில் இன்னும் சிறப்பாக நாங்கள் மனங்கொள்ள வேண்டியது என்னவென்றால், இவ்வாறு தன்னார்வம் காரணமாக தனியாகச் செயற்படுகின்றவர்கள் அகராதிகளை உருவாக்கியிருக்கின்றார்கள் என்பது ஒரு சாதாரண விடயமல்ல. ஆகவே எங்களுக்கு பரந்ததும், வலுவானதுமான ஒரு கடந்தகாலம் இருக்கின்றது.

பரந்ததும், வலுவானதுமான நிகழ்காலம் இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த விடயங்கள் எங்களது கல்விபரப்புக்குள், உயர்கல்விப் பரப்புக்குள் எந்தளவிற்கு அறியப்பட்டிருக்கின்றது, விளங்கப்பட்டிருக்கின்றது என்பது ஒரு பெரும் கேள்வியாக இருக்கின்றது.

ஒரு உயர்கல்விச் சூழலில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆசிரியன் என்ற வகையில் இதனை நான் தெளிவாகவும் உறுதியாகவும் கூற முடியும். எனவே நாங்கள் தன்னார்வம் காரணமாக தனிமனிதர்களாக தங்களுடைய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு செய்ற்படுகின்ற இந்தப் பேராளுமைகளின் பங்களிப்பு என்பது எமது கல்விச் சமூகத்திற்கு, உயர்கல்விச் சமூகத்திற்கு வளம் அளிப்பதாகவும் எங்களுடைய அறிவுச் சமூகம் ஒரு பல்பரிமாணம் கொண்டதாக பரிமளிக்க வேண்டும் என்பதும் எங்களுடைய நோக்கமாகும்.

# சிறுவர் பூஞ்சோலை



ALAN - 8år



LEAH - 7år

## Bergen நகரில் இரவு வேளைகளில் இளைஞர்களின் பாதுகாப்பு குறித்து புதிய ஆய்வு,
## En ny kartlegging utført av kompetansesenteret Nok.




Bergen நகர மையத்தில் இரவு நேரங்களில் பல இளைஞர்கள் தங்களை பாதுகாப்பற்றவர்களாக உணருகின்றனர் என Nok Bergen மேற்கொண்ட புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

438 இளைஞர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், இரவு 11 மணிக்குப் பின்னர் நகர மையத்தில் சுமார் 50 வீதமானோர் பாதுகாப்பற்றதாக உணருவதாகவும், ஐந்தில் ஒருவர் அடிக்கடி அல்லது எப்போதும் அச்சம் நிறைந்ததாக உணருவதாகவும் கூறியுள்ளனர்.

மது, போதைப்பொருள் பயன்பாடு, வன்முறை, பாலியல் தொல்லை, அதிக மக்கள் கூட்டம், இருண்ட பகுதிகள் மற்றும் இரவு நேரத்தில் வீட்டிற்கு திரும்பும் பயணம் ஆகியவை முக்கிய காரணங்களாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெண்கள் பாலியல் தொல்லை மற்றும் பாலியல் வன்முறையால் அதிகம் அஞ்சுகின்றனர். ஆண்கள் உடல் வன்முறை அதிகமாக சந்திப்பதாக கவலைப்படுகின்றனர். சிறுபான்மை பின்னணியினர், இளம் வயதினர் மற்றும் LGBTQ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய குழுக்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

Bergen நகரின் சிறுவர் பாதுகாப்பு, சமூக சேவைகள் மற்றும் பன்முகத் தன்மைக்குப் பொறுப்பான நகர நிர்வாக உறுப்பினர் Charlotte Spurkeland (H), இளைஞர்களின் பாதுகாப்பு குறித்த இந்தத் தகவல்களை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதிக தெருவிளக்குகள், இரவு நேரத்தில் பாதுகாப்பான பெரியவர்களின் இருப்பு, மேம்பட்ட பொது போக்குவரத்து, பாலியல் தொல்லையைத் தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் சில பொழுதுபோக்கு இடங்களில் "Ask for Angela" திட்டத்தை சோதனை முறையில் அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் அறிக்கையில் முன்மொழியப் பட்டுள்ளன.